1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வி முடவியல் மருத்துவம் பற்றியது. கல்லூரியிலே இப்படிப்பட்ட படிப்பு சொல்லித்தரப்படுகிறதா என்பது. ஜாதகத்திலே பல குறைபாடுகள் இருக்கலாம். பல பேர்களுடைய ஜாதகம் எனக்குத் தெரியாது. அவரவர்கள் ஜாதகத்தைக் காட்டி ஆதாரங்களைத் தெரிவித்திருந்தால் முறைப்படி அவை பரிசிலிக்கப்பட்டிருக்கும்.

Kancheepuram Drainage Scheme.

* 108 *Q.*—THIRU R. R. MUNUSAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Water Supply and Drainage Board has executed a drainage scheme at Kancheepuram: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(இ) காஞ்சிபுரம் வடிகால் திட்டத்தை நிறுவுவதற்காக ரூ. 105.44 லட்சம் செலவும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.22 லட்சம் பேணுதல் நடைமுறைச் செலவும் ஆகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு அரசு 1970 ஜூன் திங்களில் ஒப்புதல் வழங்கியது. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் கடனுதவி பெற்று தமிழ்நாடு நீர் வழங்கு-வடிகால் வாரியம் இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே கழிவுநீர் வாரியம் அமைப்பதுபோல் என்னுடைய கோட்டத்திலுள்ள திண்டிவனம் போன்ற இடங்களிலே வடிகால் இல்லாததால் போதுமான சுகாதார வசதிகள் இல்லை, இதனால் மக்களின் சுகாதாரம் கெடுகிறது. எனவே தமிழகத்தின் மற்ற நகராட்சிகளிலும் குடிநீர் வாரியம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நகராட்சி மன்றங்களிலே வடிகால் வாரியம் அமைக்கப்பட்டால், மன்றங்களைக் கழுவிவிடு வதற்குத்தான் அவை பயன்படும். நகராட்சியின் பகுதிகளில் வடி கால் வசதிகள் இல்லையென்றால், அதைச் செய்ய வேண்டுமென்று

நகராட்சிகள் விண்ணப்பித்துக்கொள்ளலாம். அதை நிறைவேற்றுவது சாத்தியமா என்பது பரிசீலிக்கப்படும். அதற்குப் பிறகு கடன் உதவி ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து என்ன பங்கு கிடைக்கிறது என்பதைப்பொறுத்தும் தமிழக அரசு எந்த அளவுக்கு நிதி ஒதுக்க முடியும் என்பதையும் தீர்மானித்து அதற்குப் பின்னால் செயல்படுத்தப்படும். அந்தந்த நகராட்சிகள் விண்ணப்பித்துக்கொண்டால், முறைப்படி அவை பரிசீலிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, வடிகால் வாரியம் தமிழ்நாட்டிலே சிறந்த பணியாற்றிவருகிறது. வடிகால் வாரியம் மத்திய சர்க்காரிடமிருந்து பெருநிதியைப் பெற்று தமிழகத்திலே அந்தப் பணிகளை விரிவுபடுத்துவதற்கு அரசு வழிசெய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் என்பது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காகவும், வடிகால்களை ஆங்காங்கே ஏற்படுத்தித் தருவதற்காகவும் அமைக்கப்பட்டிருப்பது ஆகும். சில குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை மத்திய அரசு கொடுக்க முன்வந்தது. அப்படி முன்வந்ததேதவிர, அந்தத் தொகையை—1 கோடியே 70 லட்சம் ரூபாய் தருவதற்கு இசைவு தந்தாலும்—அந்தத் தொகையின் அளவைக் குறைத்துக் கொண்டே வந்துவிட்டது. இப்படிப்பட்ட வடிகால் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரே இடத்தில் பல லட்சம் ரூபாயைச் செலவிடவேண்டிய திட்டமாக இருப்பதால், ஓரளவிற்கு ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் கடன் நிதி உதவியினாலும், தமிழக அரசின் கடன் உதவியினாலும் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு திட்டமும் அதற்குரிய பல்வேறுவிதமான பிரச்சினைகளைத் தீவிரமாக ஆராய்ந்து அதற்கான கடன் பல்வேறு மூலைகளிலிருந்து கிடைப்பதைப் பொறுத்து நிறைவேற்றப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : காஞ்சிபுரத்திலே இந்தத் திட்டம் ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலம் ஆகியும் இன்னும் ஏன் முடிவடையாமல் இருக்கிறது. காரணம் என்ன? காண்ட்ராக்டர் தாமதம் செய்கிறாரா அல்லது இந்த ட்ரெய்னேஜ் போர்டு பணம் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டதால் வேலை முடியவில்லையா?

1973 ஆகஸ்டு 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏறத்தாழ இரண்டாண்டுக் காலம் என்பது தாமதத்திற்கு அடையாளம் அல்ல. ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலம் ஆகலாம். ஏறத்தாழ மூன்று ஆண்டுக்கால அளவில் நிறைவேற்றப்படும் என்ற அளவிலேதான் இது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், பம்பிங் ஸ்டேஷன் சம்பந்தப்பட்ட வேலை 60 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோல் அதிக அகலமான பைப்கள் போடுகின்ற வேலை 70 சதவீதம் நிறைவேறியிருக்கிறது. 1974 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக இது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக 175 லட்ச ரூபாய் ஆகுமென்றும் இதிலே 73 லட்சம் ரூபாய்க்கான வேலைகள் இதுவரை நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : நூற்று ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் திருத்த மதிப்பீடு வர இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி யொரு விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்கிறபோது ஆங்காங்கே இருக்கிற நகர சபைகள் கழிவுநீரைப் போக்குவதற்கான வடிகால்களை அமைக்க விண்ணப்பம் போட்டால் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். இது எல்லா நகராட்சிகளுக்கும் அவசியமாக இருப்பதால், அவர்களே விண்ணப்பம்போடும்படி ஏன் அரசாங்கம் வற்புறுத்தக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற நகரசபைகளுக்கு, அரசாங்கம் என்ன என்ன தேவை என்று ஆலோசனை சொல்லவேண்டிய அவசியம் இல்லை. பலபேர்கள் விண்ணப்பிக்கிறார்கள். எந்த விண்ணப்பம் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும், நெருக்கடி யானது என்று கவனிக்கப்பட்டு, அந்த வரிசையிலேதான் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.